### ராகுல் காந்திக்கு ஆபத்து!

# நடைபயணத்தின் போது பா.ஜ.க.வினர் நாசவேலை!

## காங்கிரஸ் கட்சித் தலைவர் கார்கே - அமித்ஷாவுக்கு கடிதம்!

கவுகாத்தி, ஜன. 25

அசாமில் பாரத் ஜடோ நியாய நடைபயணத்தில், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் அம்மாநில போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்ட நிலையில், இந்த விவகாரத்தில் தலையிடக் கோரி அமித்ஷாவுக்கு, கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த ஆண்டு கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ராகுல் காந்தி மேற்கொண்டிருந்த பாரத் ஜடோ யாத்திரை காங்கிரஸுக்கு பெரும் உத்வேகத்தை கொடுத்தது. கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரஸ் எதிர்கொண்டிருந்த இடர்பாடுகள் கொஞ்சம் நஞ்சமல்ல. ஏற்கெனவே ஆட்சியிலிருந்த மாநிலத்தில் ஆட்சியை இழந்தது, சொந்த கட்சியின் நிர்வாகிகளே கட்சி தலைமைக்கு எதிராக புகார்களை எழுப்பியது, மூத்த தலைவர்களின் விலகல், பா.ஜ.க.வுக்கு தாவிய முக்கிய நிர்வாகிகள் என காங்கிரஸ் தனது மொத்த பலத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழந்துக் கொண்டே வந்திருந்தது.

இப்படி இருக்கையில்தான் பாரத் ஜடோ யாத்திரை கட்சியின் தொண்டர்களுக்கு காங்கிரஸ் மீது புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது. அவர்கள் ராகுல் காந்தியுடன் வீதியிறங்கி நடந்தார்கள். களப்பணியில் ஈடுபட்டார்கள், 10 ஆண்டுகளில் காங்கிரஸ் தன்னை வளர்த்துக்கொள்ள முழுவீச்சில் செயல்பட்டது. அதன் அங்கமாக தொண்டர்கள் இருந்தார்கள். இந்நிலையில் 'பாரத் ஜடோ நியாய யாத்திரை' என இரண்டாம் கட்ட யாத்திரையை ராகுல் காந்தி தொங்கியுள்ளார்.

இந்த யாத்திரை மணிப்பூரில் தொடங்கி மொத்தமாக 15 மாநிலங்கள், 110 மாவட்டங்கள், 100 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 337 சட்டமன்ற தொகுதிகள் என 67 நாட்கள் நீள்கிறது. இறுதியாக மகாராஷ்டிராவின் மும்பையில் முடிவடைகிறது. சில இடங்களில் பேருந்திலும், பல இடங்களில் நடத்தும் சுமார் 6,713 கி.மீ தூரத்தை ராகுல் காந்தி இந்த யாத்திரை மூலம் கடக்கிறார். பயண திட்டத்தின்படி மணிப்பூர், நாகலாந்தில் யாத்திரையை முடித்த அவர், கடந்த 18ம் தேதி அசாமில் யாத்திரையை தொடக்கினார்.

இம்மாநிலத்தில் 8 நாட்களில் 17 மாவட்டங்களில் 833 கி.மீ தூரமும் பயணம் மேற்கொள்கிறார். ஆனால் அசாமில் அவர் நுழைந்ததிலிருந்து சலசலப்புகள் மேலெருந்திருக்கின்றன. கடந்த 19ம் தேதி யாத்திரை வாகனங்கள் மீது சிலர் தாக்குதல் தொடுத்திருக்கின்றனர். பா.ஜ.க.வின் இளைஞர் அமைப்பான பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா அமைப்பினர்தான் இந்த நாச வேலையில் ஈடுபட்டிருப்பதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியது.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் கவுகாத்தியில் ராகுல் காந்தியின் யாத்திரை நுழைய முயன்ற போது, காவல்துறை அனுமதி மறுத்தது. போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படும் என்று கூறி தடை விதிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. ஆனால், இதை ஏற்காத காங்கிரஸ் தொண்டர்கள் காவல்துறையினரின் தடுப்புகளை மீறி உள்ளே நுழைய முயன்றனர். அப்போது காவல்துறைக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் ராகுல் காந்தி உட்பட பலர் மீது வழக்குப்பதிவு செய்திருக்கிறது. இந்த வழக்குப்பதிவில் உள்நோக்கம் இருப்பதாக காங்கிரஸ் கூறி வந்த நிலையில், அம்மாநில முதல்வரான பா.ஜ.க.வின் ஹிமந்த பிஸ்வ சர்மா, “நான்தான் ராகுல் காந்தி மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டேன்” என்று வெளிப்படையாகவே கூறியுள்ளார். எனவே அசாமில் அசாதாரண சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில், ராகுல் காந்திக்கும், அவரது பயண குழுவினருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் எழுந்திருக்கிறது என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார். அதில், பா.ஜ.க.வினர் வேண்டும் என்றே ராகுல் காந்தியின் கான்வாய் அருகே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அசாம் காவல்துறையினர் உடந்தை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

எனவே, இந்த விவகாரத்தில் தலையிட்டு ராகுல் காந்தி மற்றும் அவரது பயண குழுவினரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அமித்ஷாவுக்கு எழுதிய கடிதத்தில் கார்கே குறிப்பிட்டுள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட பினாயூர் ஊராட்சியில் புதிய மேம்பாலத்திற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். உடன் ஒன்றிய செயலாளர் டி குமார், ஊராட்சி மன்ற தலைவர் ப.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ. சிவராமன், கவுன்சிலர் கு. துரைவேல்,பவுன் சின்ராஜ், அன்புராஜ்,ஒன்றிய பொருளாளர் பாலமுருகன், தலைவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மோகன், சுந்தரமூர்த்தி,பொன்மொழி, பன்னீர்செல்வம்,லோகநாதன்,நந்தா, கழக நிர்வாகிகள்,பரமசிவன், முருகன் மணிகண்டன் சீனிவாசன், எழிலரசன், செயல் அறிஞன்,சக்தி,சேகர், ஏழுமலை, ரகு, ஒப்பந்ததாரர் யோகநாதன் உடன் உள்ளனர்.

### ஏ.கே.எஸ்.விஜயன் - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

# நெல்லை மத்தியில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## என்.மாலை ராஜா தலைமை! சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

நெல்லை.ஜன.25-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25ஆம் தேதி -வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் நெல்லை டவுன் வாகையடி முனை குளப்பிறை தெருவில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என். மாலை ராஜா தலைமையில் மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன் நெல்லை பகுதி கழக செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கல்லூர் பாலசுப்பிரமணியன் வரவேற்புரையாற்றுகிறார்.நிகழ்ச்சியை மாணவரணி துணை அமைப்பாளர்கள் ரம்சான் அலி, ஆறுமுகராஜா ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், தலைமைக் கழக பேச்சாளர் தரமணி ஜெகதீசன், நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன் பேச்சி பாண்டியன், தீர்மானக்குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்

மாவட்ட அவைத்தலைவர் முருகன், துணை செயலாளர்கள் சுரேஷ்,தர்மன், கிரிஜா குமார், பொருளாளர்வண்ணைசேகர்,மேயர் சரவணன்,துணைமேயர் ராஜ்,பகுதி கழக செயலாளர்கள் சுப்பிரமணியன், சாகுல் ஹமீது, செல்லத்துரை,ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி,மாரியப்பன், அன்பழகன், வேலங்குளம் முருகன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஸ்வரி,நடராஜன், பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி, உள்பட இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள்,மாவட்ட, மாநகர, கழக நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழகத் தொண்டர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் வினோத்,முத்துகிருஷ்ண ராஜா, அஸ்வின் பேபி ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.





திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் ஒன்றியம் தொடுகாடு ஊராட்சியில் ஹூண்டாய் மோபீஸ் இந்தியா நிறுவனத்தின் பங்களிப்பில் 48 பழங்குடியின மக்களுக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நேற்று அடிக்கல் நாட்டு விழா திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் டாக்டர். த. பிரபு சங்கர் ஐ.ஏ.எஸ்., ஹூண்டாய் மோபீஸ் இந்தியா நிறுவனத்தின் அலுவலர்கள், யுனைடெட் வே நிறுவனத்தின் பிரதிநிதிகள், மோ.இரமேஷ் , வி. எஸ். நேதாஜி, ஆர். கோபால், டி. காமராஜ், கீதா முனுசாமி, ஜானகிராமன், மதன், பிஞ்சிவாக்கம் உதயா, வேதநாயகி, பொறியாளர் அருள், ஏ.டி.கௌசல்யா, உள்ளிட்ட பயனாளிகள் கிராம பொதுமக்கள் பங்கேற்றனர்.


